# கண் ஒளி

விழி 35 | பார்வை 08 | மார்ச் 2019



**குழந்தைகளின் கண் பாதுகாப்பு**

**விபத்தினால் ஏற்பட்ட கண் நரம்பு பாதிப்பு**

ARAVIND EYE CARE SYSTEM

aurolab

நான் பார்க்கும் அனைத்தும் தற்போது தெளிவாகத் தெரிகின்றன

Every detail of my vision is truly incredible



*Goodbye spectacles !!*

(High spectacle independance)

**நீங்களும் கண்புரை அறுவைசிகிச்சைக்குப்பின், கண்ணாடியின்றி, துல்லியமான பார்வை பெற வேண்டுமா?**

அரவிந்த் கண் மருத்துவமனை ஆலோசகரை அணுகுங்கள் . . .

# கண் ஒளி

**அரவிந்த் வெளியீடு**

கண் நல விழிப்புணர்வு
மாத இதழ்

ஆசிரியர்
டாக்டர்.ஜி.நாச்சியார்

ஆசிரியர் குழு
சித்ரா துளசிராஜ்
கோ. முருகராஜ்
திவ்யா ரமேஷ்

இதழ் வடிவமைப்பு
ரா. மீனாட்சி

முன் அட்டை ஒளிப்படம்
ம. ராஜ்குமார்

சந்தா பொறுப்பாளர்
ஜெ. பரிமளா



தொடர்புக்கு :
'கண்ஒளி'
அரவிந்த் கண்
மருத்துவமனை,
1, அண்ணாநகர்,
மதுரை – 625020

மின்னஞ்சல் :
kannoli@aravind.org


# உள்ளே . . .


| | |
|---|---|
| மரத்தினால் ஆன கண் கண்ணாடி ஃபிரேம்கள் | 5 |
| கூம்பு வடிவக் கருவிழி | 6 |
| 12வது உலகக் கண் நீர் அழுத்த நோய் விழிப்புணர்வு வாரம் | 8 |
| குழந்தைகளின் கண் பாதுகாப்பு | 10 |
| நரம்புக் கோளாறும் சிகிச்சையும் | 12 |
| வெள்ளெழுத்து | 14 |
| விபத்தினால் ஏற்பட்ட கண் நரம்பு பாதிப்பு | 16 |
| பிறந்த குழந்தைக்கு ஏற்பட்ட கண்நீர் அழுத்த நோய் | 17 |
| கண்ஒளி ஏற்றுவோம்! | 18 |
| அரவிந்த் இலவச கண் பரிசோதனை முகாம்கள் | 19 |

தலையங்கம்

# விழிப்புணர்வின் அவசியம்

*பார்வைக் குறைபாடு ஏற்படுவதற்கு கண்புரை, கண் நீர் அழுத்தம், விழி–ஒளிக் குறைபாடு (Refractive Errors) எனப் பல முக்கியக் காரணங்கள் உள்ளன. உலக அளவில் இருக்கக்கூடிய பார்வைக் குறைபாடுகளில் 75 சதவீத கண் நோய்களை சரிசெய்யலாம் அல்லது சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலமாக தடுக்கலாம். உலகில் இருக்கும் மக்கள்தொகையில் 110 கோடி மக்கள் கிட்டப்பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இக்குறைபாட்டை கண்ணாடி அணிவதன் மூலமாக எளிதில் சரிசெய்யலாம். ஆனால் இதனைக் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டுள்ளதா என்பதுதான் நம் அனைவரின் முன்பும் இருக்கக்கூடிய மிகப்பெரும் கேள்வி.*

*கண் நோய்கள் குறித்த விழிப்புணர்வு கண் மருத்துவமனைகள், தொண்டு நிறுவனங்கள், மற்றும் தனியார் சங்கங்களின் மூலமாக எனப் பல வழிகளில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதன் விளைவையும் நம்மால் காண முடிகிறது. மாறுகண்ணும் கண்களில் வெண்புள்ளி இருப்பதும் அதிஷ்டம் என்று கருதிய மக்கள் தற்போதுதான் அந்த எண்ணங்களில் இருந்து மீண்டு அவை கண் நோய்க்கான அறிகுறிகள் என்று நம்பத் தொடங்கியுள்ளனர். கண்களில் எதிர்பாராமல் ஏற்படும் விபத்துகளுக்கு நாட்டு மருத்துவத்தைக் கையாளாமல் கண் மருத்துவரை அணுக வேண்டும் என்ற எண்ணம் துளிர் விடத் துவங்கியுள்ளது.*

*நாகரிகமும், பண்பாடும் இவற்றோடு சேர்ந்து தொழில்நுட்பமும் வளர்ந்தும் மாறிக்கொண்டும் வருகிறது. இவை அனைத்தும் மக்களின் வாழ்க்கைச் சூழலை மேம்படுத்த உதவியாய் இருந்தாலும்கூட பெயரில்லாத பல நோய்களையும் நாளுக்கு நாள் உருவாக்கிக்கொண்டே செல்கிறது. பல காலமாக இருந்துவரும் நோய்களுக்கே தற்போதுதான் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுகிறது எனும்போது புதிதாக வரும் நோய்களிலிருந்தும் அனைவரும் நம்மைக் காத்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது.*

*நமது அறிவையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்திக்கொள்வது எந்த அளவிற்கு அவசியமானதோ அதே அளவிற்கு நம் உடல் நிலையை பாதுகாத்துக் கொள்வதும் மிகவும் அவசியம் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.*

***ஆசிரியர் குழு***

செய்தி

# மரத்தினால் ஆன கண் கண்ணாடி ஃபிரேம்கள்



ஆரம்பகால கட்டங்களில் மிகச் சில வகைகளில் மட்டுமே ஃபிரேம்கள் வெளிவந்து கொண்டிருந்தன. கண் குறைபாடுகள் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படத் தொடங்கியதும் கண் கண்ணாடிகளின் தேவை அதிகமாக இருந்தும்கூட, அதனுடைய தோற்றத்தால் கண்ணாடியை அணிவதற்கு சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை யாரும் விரும்பவில்லை. அதன் பிறகே கண்ணாடி ஃபிரேம்கள் பல வகைகளில் பல வேறுபாடுகளுடன் வெளிவரத் தொடங்கியது.

தற்போது கண் கண்ணாடி ஃபிரேம்கள் அடுத்த கட்டத்திற்குச் சென்றுள்ளது. பிளாஸ்டிக் பயன்பாடு குறித்த விழிப்புணர்வின் காரணமாக, பிளாஸ்டிக்கைத் தவிர்த்து மரம், துணி மற்றும் பேப்பர் போன்றவற்றைக் கொண்டு மாற்று வழியில் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்வாறு சந்தையில் அறிமுகம் செய்யப்பட்ட பொருட்களில் ஒன்று மரத்தினால் ஆன கண் கண்ணாடி ஃபிரேம்கள். மரத்தினால் ஆன ஃபிரேம் என்றால் அதிக எடையுடன் அணிவதற்கு சற்று கடினமாக இருக்கும் என்று எண்ணுவதற்கு இடமளிக்காமல் பிளாஸ்டிக் ஃபிரேம்களைப் போன்றே குறைந்த எடையுடன் இருக்குமென உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். சில மரங்கள் இயற்கையாகவே சிவப்பு மற்றும் அரக்கு நிறங்களில் இருக்கும். மரங்களுக்கு உண்டான இயற்கை வண்ணங்களில் மட்டுமே ஃபிரேம்கள் தயாரிக்கப்படுகின்றன.

கண்ணாடி அணியும் தேவை இருந்து புதுமையை விரும்புபவர்களுக்கு இந்தப் புதிய ஃபிரேம்கள் நல்ல தேர்வாக இருக்கும். சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் இருப்பதாலும், எளிதில் உடையாது என்பதாலும் அதிக மக்கள் இந்த ஃபிரேம்களை விரும்பி வாங்குகின்றனர்.

*திவ்யா ரமேஷ்,*
*அரவிந்த் கம்யூனிகேஷன்ஸ், மதுரை*

## சந்தா செலுத்த...


**2 வருடச் சந்தா: ரூ.50/–, 4 வருடச் சந்தா: ரூ.100/–**

கண் ஒளி இதழுக்குச் சந்தா செலுத்த விரும்புபவர்கள், சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பி வைக்கவும். உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் அஞ்சல் இலக்க எண்ணையும் குறிப்பிட்டு, 'கண் ஒளி சந்தாவுக்கு' என எழுதவும்.

**முகவரி:**

காசாளர், கண் ஒளி, அரவிந்த் கண் மருத்துவமனை,
1, அண்ணா நகர், மதுரை – 625020. தொலைபேசி: 0452–4356500

# கூம்பு வடிவக் கருவிழி



கண்ணின் கருவிழியானது சாதாரணமாக இல்லாமல் கூம்பு வடிவத்துடன் காணப்படுவது கூம்பு வடிவக் கருவிழி எனப்படும். இப்பாதிப்பு பிறக்கும் போதிருந்தோ பருவமடையும் வயதிலோ ஏற்படலாம். பொதுவாக இப்பாதிப்பு கருவிழிக்கு ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைவினாலோ கண்ணில் ஏற்படும் அழற்சியினால் கண்களை தொடர்ந்து தேய்த்துக்கொண்டே இருப்பதாலோ ஏற்படுகிறது. கருவிழியின் மத்திய பாகத்தின் கனம் குறைந்து உள்ளிருக்கும் திரவத்தின் அழுத்தத்தால் உந்தப்படுவதால் கருவிழி கூம்பு வடிவமாக மாறுகிறது. இதனால் பார்வையில் அதிக மாற்றம் ஏற்படும். கருவிழியானது கூம்பு வடிவத்தை அடைவதால் கீழ்நோக்கிப் பார்க்கும்போது கீழ் இமை குவிதல் வடிவமடையும். இது Munson's அடையாளம் எனப்படுகிறது. கூம்பின் அடிப்பகுதியில் பழுப்பு நிறத்தில் வட்டவடிவ வளையம் காணப்படும். இது Fleisher's வளையம் எனப்படும். கூம்பு வடிவ கருவிழி பாதிப்பைக் கண்டறிய இதுவே முக்கிய அடையாளமாகும்.

## சிகிச்சை முறைகள்

கூம்பு வடிவக் கருவிழி உடையோரின் பார்வை கூடிய வரையில் கண்ணாடியால் சரிசெய்யப்பட வேண்டும். அவர்களுக்கான கண் பரிசோதனையை மிகக் கவனமாகச் செய்ய வேண்டும். கண் கண்ணாடிகள் சரியான பலனை அளிக்காவிட்டால் அவர்களுக்கு கருவிழி ஒட்டுக் கண்ணாடி பரிந்துரைக்கப்படும். கருவிழி ஒட்டுக் கண்ணாடியை (RGP) அணிந்து கொள்வதன் அவசியத்தை நோயாளிகள் உணர வேண்டும்.

கண்ணாடியோ கருவிழி ஒட்டுக் கண்ணாடியோ எதிர்பார்க்கும் பலனை அளிக்காவிட்டால் கார்னியல் கொலாஜன் கிராஸ் லிங்கிங் (C3R) என்ற கதிர்வீச்சு சிகிச்சை முறையை மருத்துவர் பரிந்துரைப்பார். கருவிழியின் வளைவு ஆரம் அதிகரிப்பதைக் கட்டுபடுத்த இந்த சிகிச்சை முறை மேற்கொள்ளப்படுகிறது. ஐசோடோனிக், ஹைபோடோனிக் என்ற இரண்டு வகைகளில் இந்த C3R சிகிச்சை மேற்கொள்ளப்படும். நோயாளி 14 வயதிற்கு கீழ் இருந்தால் மயக்க மருந்து அளித்து சிகிச்சை அளிக்கப்படும். இச்சிகிச்சை முடிந்த பின்பு வைட்டமின் B2 நிறைந்த சொட்டு மருந்து அளிக்கப்படும். இது கருவிழிக்குத் தேவையான ஊட்டச்சத்தினை அளிக்கும்.

சில நோயாளிகளுக்கு கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர் பரிந்துரைப்பார். ஆனால் இச்சிகிச்சை தேவைப்படுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும். பெரும்பாலானோருக்கு கருவிழி ஒட்டுக் கண்ணாடி மற்றும் C3R சிகிச்சை முறை போதுமான பலனை அளிக்கும். கருவிழியின் திசு அடுக்குகளில் ஏற்படும் தழும்புகளால் பார்வை குறைந்திருந்தாலும் கருவிழியில் நீர் கோர்த்துக் கொள்வதால் வீக்கம் ஏற்பட்டிருந்தாலும் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்வது கடினம்.

கருவிழியின் மத்தியப் பகுதியின் கனம் குறைந்து வருகிறதா என்பதைத் தொடர்ந்து பரிசோதித்து வர வேண்டும். கருவிழி அதிக பாதிப்பை அடைவதற்கு முன் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். நீர் கோர்த்துக் கொள்வதால் ஏற்படும் வீக்கத்தை சில எளிய சிகிச்சை முறை மற்றும் மருந்துகளால் குறைக்கலாம். இது விரைவில் குணமடைந்துவிடும். வீக்கம் குறையும்போது கருவிழியில் ஓரளவு தழும்புகள் ஏற்படும் வாய்ப்புள்ளது.

**R.R. *சக்திமாரி*, M.S. *மகாலெட்சுமி, விழி-ஒளி ஆய்வாளர்,***
***அரவிந்த்-கோயம்புத்தூர்***

## வாசகர்கள் கவனத்திற்கு

ரூ.25 எனும் கண் ஒளி இதழுக்கான வருடச்சந்தா, இருபது வருடங்களுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது. சில நூறுகளில் இருந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை, தற்போது பதினைந்தாயிரத்தைத் தாண்டியுள்ளது. இந்த இருபது ஆண்டுகளில் காகித விலை, அச்சு மற்றும் வரிக் கட்டணங்கள் கணிசமாக உயர்ந்துள்ள நிலையில் நம் இதழுக்கான சந்தாவை அதிகரிக்கும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் 2019 முதல் புதியக் கட்டணம் நடைமுறைக்கு வர உள்ளது.

| 1 வருடச் சந்தா | 2 வருடச் சந்தா | 5 வருடச் சந்தா |
|---|---|---|
| ரூ.60 | ரூ.110 | ரூ.250 |

கண்நலன் பற்றிய விழிப்புணர்வு இதழ் அனைவருக்கும் ஏற்ற விலையில் இருக்க வேண்டும் என்பதற்காக அரவிந்த் மருத்துவமனை, இந்த விலையேற்றத்திற்குப் பிறகும் ஓர் இதழுக்கான மொத்த செலவில் மூன்றில் ஒரு பங்கை ஏற்றுக் கொள்கிறது.

ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக புதுப்பிக்கும் சந்தாதாரர்களுக்கு தற்போது உள்ள சந்தாக் கட்டணத்தைச் செலுத்த அரிய வாய்ப்பு. கண் ஒளி இதழுக்கான உங்கள் ஆதரவைத் தொடர்ந்து அளிக்கவும்.

# 12வது உலகக் கண் நீர் அழுத்த நோய் விழிப்புணர்வு வாரம்

உலகிலேயே பார்வையிழப்பிற்கான இரண்டாவது முக்கிய காரணமாக இருப்பது கண் நீர் அழுத்த நோய். கண் நீர் அழுத்த நோய் பற்றியும் அதற்கு உடனடியாக சிகிச்சை பெற வேண்டியதன் அவசியம் பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த இந்த ஆண்டு மார்ச் மாதம் 10 முதல் 15ம் தேதி வரை உலகக் கண் நீர் அழுத்த நோய் வாரம் அனுசரிக்கப்படுகிறது. உலகக் கண் நீர் அழுத்த நோய் மருத்துவர்கள் சங்கம் மற்றும் உலகக் கண் நீர் அழுத்த நோயாளிகள் சங்கம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் உலகமெங்கும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 2–வது வாரம் உலகக் கண் நீர் அழுத்த நோய் விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்கப்படுகிறது.

**உலகக் கண் நீர் அழுத்த நோய் வாரம் அனுசரிப்பதன் காரணம்:**
தற்போதைய சூழ்நிலையில் கண்புரை நோயை அடுத்து கண் நீர் அழுத்த நோய் தான் பார்வையிழப்பிற்கான முக்கிய காரணமாக உள்ளது. நமது சுற்றுப்புறம், பழக்கவழக்கங்கள், கண்களுக்கான வேலை, ஓய்வின்மை எனப் பல காரணங்களாலும், பரம்பரையாக ஏற்படக்கூடிய நோய் என்ற காரணத்தாலும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கண் நீர் அழுத்த நோயாளி எனக் கண்டறியப்பட்ட ஒருவர், இந்நோயின் தன்மையறியாது தகுந்த சிகிச்சை பெறாமல் இருந்தால், அது அவரது பார்வையை முழுவதுமாகப் பறித்துவிடும். இதற்கு, தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதே உலகக் கண் நீர் அழுத்த வாரம் அனுசரிக்க முக்கியக் காரணம் ஆகும்.

கண் நீர் அழுத்த நோய் Glaucoma என்று ஆங்கிலத்தில் கூறப்படும். இந்த நோய் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோருக்கு இந்நோய் தங்களுக்கு இருப்பதே தெரியாது. குணப்படுத்த முடியாதபடி, பெருமளவுக்கு பார்வை பாதிப்பு ஏற்பட்ட பின்னரே தனக்கு அந்த நோய் வந்திருப்பது நோயாளிக்குத் தெரியும். வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட கண் நீர் அழுத்த நோய் உள்ளவர்களில் 50 சதவீதத்தினர் கண் பரிசோதனை செய்யப்படாமலும் சிகிச்சை பெறாமலும் இருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

## உலகக் கண் நீர் அழுத்த நோய் வாரத்தின் நோக்கம்

கண் நீர் அழுத்த நோய் ஒருவருக்கு ஏற்படுத்தக்கூடிய ஆபத்து எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ளச் செய்வது, குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை கண் பரிசோதனை செய்து கொண்டு, நோயைக் கண்டறிய வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவது உலக கண் நீர் அழுத்த நோய் வாரத்தின் நோக்கங்களாகும்.

## உலகக் கண் நீர் அழுத்த நோய் வாரத்தின் செயல்பாடுகள்:

பொதுமக்கள், மருத்துவர்கள், மருத்துவமனைகளின் நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் மற்றும் செய்தி ஊடகங்களின் மூலமாகக் கண் நீர் அழுத்த நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தப்படுகிறது. உலக கண் நீர் அழுத்த மருத்துவர் சங்கம், நோயாளிகள் சங்கம், மற்றும் விழிப்புணர்வு பணியில் ஈடுபட்டுள்ள மற்ற அமைப்புகளின் உறுப்பினர்களும் இணைந்து உள்ளூர் மற்றும் தேசிய அளவில் இலவச கண் நீர் அழுத்த நோய் கண்டறிதல் முகாம்கள், கருத்தரங்கங்கள், கண்காட்சிகள், மாரத்தான் ஓட்டம், பேரணிகள், தெருமுனை பிரச்சாரங்கள், பிரசுரங்கள் வினியோகித்தல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.

கண் நீர் அழுத்த நோயால் ஏற்படும் பார்வையிழப்பை தடுக்கவும், இந்நோயின் தன்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கண் நீர் அழுத்த நோயாளிகளின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்தவும் உலகக் கண் நீர் அழுத்த நோய் மருத்துவர் சங்கமும், உலகக் கண் நீர் அழுத்த நோயாளிகள் சங்கமும் உருவாக்கப்பட்டுள்ளன. பல்வேறு நாடுகளில் உள்ள கண் நீர் அழுத்த நோய் மருத்துவர் சங்கங்களுடன் தகவல் பரிமாற்றத்தின் மூலம் இந்த நோய்க்கான சிகிச்சையின் தரத்தை மேம்படுத்த உலகக் கண் நீர் அழுத்த நோய் மருத்துவர் சங்கம் பாடுபடுகிறது.

## கண் நீர் அழுத்த நோய் வாரம்

அரவிந்த் கண் மருத்துவமனையில் கண் நீர் அழுத்த நோய் வாரத்தினை அனுசரிக்கும் விதமாக மக்கள் கூடும் இடங்களில் இந்நோய் பற்றிய விழிப்புணர்வு வீதி நாடகங்கள் நடத்தப்பட உள்ளது. மேலும், அரவிந்த் கண் மருத்துவமனை சார்பாக இலவச கண் நீர் அழுத்தத்தை கண்டறியும் பரிசோதனை மார்ச் 10 முதல் 16–ம் தேதி வரை வருவோருக்கு இலவசமாக செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*– பி. விநாயகமூர்த்தி*

*கண் நீர் அழுத்த நோய் பிரிவு; அரவிந்த் – மதுரை*

## குழந்தைகளின் கண் பாதுகாப்பு

குழந்தைகள் கண் நலன்



பிறந்த குழந்தையின் கண்கள் சிறியதாக இருந்தாலும் பார்க்கும் திறன் அவர்களுக்கும் முழுமையானதாகவே இருக்கும். கண்களின் பரிணாம வளர்ச்சி என்பது மூளை வளர்ச்சியுடன் ஒத்துப்போகும் தன்மையுடையது. கண்களின் வளர்ச்சியானது இரண்டு வயது வரை வேகமாகவும், ஐந்து முதல் ஆறு வயது வரை மிதமாகவும், அடுத்த பத்து வருடங்களுக்கு மெதுவாகவும் வளர்ச்சியடைகிறது. எந்த நோயாக இருந்தாலும் அதன் பாதிப்பும் மேற்கூறிய விகிதத்திலேயே ஏற்படுகிறது. எனவே, எந்தக் கண் நோயாக இருந்தாலும் மூன்று வயதிற்குள்ளாகவே கண்டுபிடித்து அதற்கு சிகிச்சையளிக்க வேண்டும்.

பொதுவாகவே சிறு குழந்தைகளுக்கு, தங்களின் பார்வைக் குறைபாடுகளை வெளியில் சொல்லத் தெரியாது. பெற்றோர்களோ, உடன் வாழ்பவர்களோ அல்லது ஆசிரியர்களோதான் இதைக் கண்டறிய வேண்டும். ஒரு கண்ணில் மட்டும் பார்வைக் குறைபாடு இருந்தால் அதிக வயதுள்ள குழந்தைகளுக்குக் கூட அதை பெற்றோர்களிடம் கூறும் அளவிற்கு விவரம் தெரிவதில்லை. மேலும், குழந்தைக்கு கண் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டாலும் பெற்றோர்கள் சிகிச்சை முறைகளுக்கு பயந்து கொண்டும், வளர்ந்தபின் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம் என்ற தவறான எண்ணத்தினாலும் மருத்துவரிடம் செல்வதை தவிர்த்துக் கொண்டிருப்பார்கள். அதிலும் குறைமாதக் குழந்தை என்றால் கண்களில் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. முன்பை விட குறைமாத குழந்தைகளுக்கு ஏற்படும் கண் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு மக்களிடையே பரவலாக ஏற்பட்டிருந்தாலும், இன்னும் அதிகப்படியான மக்கள் குழந்தை வளரும்போது பாதிப்பு தானாகவே சரியாகிவிடும் என்றே கருதுகின்றனர். கண் நோய்களைப் பொறுத்தவரையில் எவ்வளவு விரைவில் நோயைக் கண்டறிந்து சிகிச்சை பெற்றுக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்துப் பார்வைத் திறனைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

குழந்தைகளுக்கு ஏற்படும் பார்வைக் குறைபாடுகளை எப்படிக் கண்டறிவது என்ற சந்தேகம் பலருக்கு ஏற்படலாம். நாம் செய்ய வேண்டியதெல்லாம், நமது வீட்டிலோ தெரிந்தவர்களின் குழந்தைகளுக்கோ கண் பாதிப்பு இருப்பது தெரிய வந்தால் (கண்ணில் புரை, கருவிழியில் மாற்றம், மாறுகண், கண்கள்

நிலையில்லாமல் இருத்தல், மிகச் சிறிய அல்லது மிகப்பெரிய கண்கள்) அவர்களை உடனடியாக கண் பரிசோதனை மேற்கொள்ளும்படி பரிந்துரைக்க வேண்டும். குறிப்பாகக் குறை மாதத்தில் குழந்தை பிறந்திருந்தால் மற்றும் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவை தவிர, குழந்தை பிறந்த மூன்று மாதத்தில் தாயின் முகத்தை நேராகப் பார்க்காமல் இருத்தல், நடக்கும்போது கீழே பார்க்காமல் பொருட்கள் தட்டிவிட்டு கீழே விழுதல், இரவு நேரங்களில் சரியாக நடக்க முடியாமல் தடுமாற்றம் அடைதல், பகல் நேரங்களில் வெளிச்சத்தைப் பார்க்க முடியாமல் கண் கூச்சம் இருத்தல், படிக்கும்போது பக்கத்தில் வைத்துப் பார்த்தல், தலைவலி, கண்மணியின் நிறம் மாறியிருத்தல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக கண் மருத்துவரிடம் பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம்.

மேலும், வீட்டில் ஏதேனும் ஒரு குழந்தைக்கு கண் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டாலும், அடுத்த குழந்தைகளுக்கும் கண் பரிசோதனை செய்வது அவசியம். இதன் மூலம் பரம்பரையாக ஏற்படும் நோய்களை விரைவில் கண்டறிந்து சிகிச்சை அளிக்கலாம். அதேபோல், பெற்றோர்கள் தங்களது சிறு வயதில் ஏதேனும் கண் பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தால் அவர்கள் தங்களின் குழந்தைகளுக்கும் சிறு வயதிலேயே கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

தற்போது இருக்கும் மருத்துவ வளர்ச்சியில் எத்தகைய சிறிய வயது குழந்தைக்கும் மயக்க மருந்து கொடுத்து பரிசோதனையோ அறுவை சிகிச்சையோ சிரமமின்றி செய்ய முடியும். எனவே அனைத்துப் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்கு கண் குறைபாடு இருப்பதைக் கண்டறிந்தால் எவ்வித தயக்கமும் இன்றி குழந்தைகள் நல சிறப்புக் கண் மருத்துவரை அணுக வேண்டும்.

***– டாக்டர். விஜயலட்சுமி, குழந்தைகள் கண் நலப்பிரிவு,***
***அரவிந்த்-மதுரை.***



*ஒவ்வொரு மாதமும் 10, 11 தேதிகளில் கண் ஒளி இதழ்களை 15000க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களின் முகவரிகளுக்கு முறையாகச் சரிபார்த்த பின்னரே தபாலில் அனுப்பி வைக்கிறோம். இருப்பினும் வெகு சில சந்தாதாரர்கள் தங்களுக்கு 'கண் ஒளி' இதழ்கள் சரிவர கிடைப்பதில்லை என்றும், ஒரு மாதம் வரும் இதழ் மறு மாதம் வருவதில்லை என்றும் புகாரளிக்கின்றனர். இதழ் கிடைக்கவில்லை எனில் உங்கள் ஊரில் உள்ள தபால் நிலையத்தில் புகாரளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் உங்கள் பகுதி அஞ்சல்துறை பணியாளரிடம் இதழைத் தவறாமல் விநியோகிக்கும்படி கோரவும்.* **– 'கண் ஒளி' ஆசிரியர் குழு**

கண் நரம்பியல்

# நரம்புக் கோளாறும் சிகிச்சையும்

**பரமன்:** என்னப்பா, நாகராசு. உன்னப்பாத்து ரொம்ப நாளாச்சு. எங்கேயாச்சும் வெளியூருக்கு போயிருந்தியா?

**நாகராஜ்:** இல்லண்ணே. நான் கண் ஆஸ்பித்திரில்ல இருந்தேன்.

**பரமன்:** ஏன். என்னாச்சு. கொஞ்சம் விவரமா சொல்லுப்பா

**நாகராஜ்:** என்னோட பார்வை நரம்புல வீக்கம் ஏற்பட்டுச்சு. அதான் டாக்டர்ட்ட காட்ட போனேன்.

**பரமன்:** பார்வை நரம்பா. அப்டின்னா?

**நாகராஜ்:** கண் பார்வை நரம்புன்னா, மூளையையும் கண்ணையும் இணைக்குற நரம்பு.

**பரமன்:** ஒ. பார்வை நரம்புல வீக்கம் இருக்குன்னு எப்படி நமக்கு தெரியும்பா?

**நாகராஜ்:** மூளையில கட்டி இருந்தா பார்வை நரம்புல வீக்கம் வருமாம். பார்வை நரம்பு வீக்கமா இருக்குறத மருத்துவர் பரிசோதனையின் மூலமா பார்த்து சொல்லுவாங்க. வீக்கம் ஏற்பட்டதுக்கான காரணத்தை ஸ்கேன் பண்ணி பாக்குறது மூலமா தெரிஞ்சிக்கலாம். இந்த வீக்கத்தை பாப்பில் எடிமான்னு (Papilledema) சொல்றாங்க. கட்டி இருக்குறத ஆரம்பத்துலயே கண்டுபிடிச்சு சிகிச்சை செஞ்சிகிட்டா சுலபமா குணப்படுத்திடலாம்.

**பரமன்:** அப்டியா

**நாகராஜ்:** இது இல்லாம, பார்வைல நரம்புக் கோளாறுன்னு ஒன்னு இருக்காம்.

**பரமன்:** அது என்னப்பா?

**நாகராஜ்:** கண்ணுல இருக்குற பார்வை நரம்புல இரத்த ஓட்டம் இல்லன்னா.. அதுல இருக்கிற செல்லெல்லாம் செத்திடுமாம். இல்லன்னா. செயல்படாம இருக்குமாம். இந்தப் பார்வை நரம்பு சிக்கல்லயே இரண்டு வகை இருக்காம். ஒன்னு, இரத்த ஓட்டம் தடையா இருக்குறதால ஏற்படுறது. இன்னொன்னு, நீரிழிவு, இரத்த அழுத்தம் காரணமா ஏற்படுறது.

**பரமன்:** எல்லோருக்கும் வருமா இந்தப் பிரச்சனை?

**நாகராஜ்:** பொதுவா, இந்த பாதிப்பு 50 வயதிற்கு மேல் இருக்குறவங்களுக்கு வர அதிக வாய்ப்பு இருக்கு. ஆனா இளம் வயதினரும் சில காரனங்களால இந்த பாதிப்பு ஏற்படலாம்.

**பரமன்:** சரி. இத நாம எப்படி தெரிஞ்சிக்கிறது?

**நாகராஜ்:** இந்த நோயை கண் மருத்துவரால மட்டுமே கண்டுபிடிக்க முடியும். பிரச்சனை இருக்கிற கண்ணுக்குள்ள ஒளிக்கதிரை செலுத்தி பரிசோதனை செய்வாங்க.

**பரமன்:** நிறையா விஷயத்த தெரிஞ்சு வச்சிருக்கியே.

**நாகராஜ்:** அப்டில்லாம் இல்லப்பா. நீயும் வருஷத்துக்கு ஒருதடவ கண்ண டாக்டர்ட்ட காட்டுண்ணே. கண்ணுல சிக்கல் இருந்தா ஆரம்பத்துல வைத்தியம் பாக்க ஆரம்பிச்சிட்டா பெரிசா தொந்தரவு இருக்காது. சீக்கிரமாவும் குணமாக வாய்ப்பு இருக்கு.

**பரமன்:** சரிப்பா. போறப்போ பசங்களையும் கூப்பிட்டுட்டு போறேன்பா.

*கண் ஒளி குழு*

சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ள அரவிந்த் கண் பரிசோதனை மையம்

**துவரங்குறிச்சி**

கதவு எண். 63/5, N.G. காம்ப்ளக்ஸ், ரைஸ்மில் தெரு

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அருகில், துவரங்குறிச்சி, திருச்சி மாவட்டம்

தொலைபேசி எண் : 9498840021



# வெள்ளெழுத்து





கண்களில் இருக்கும் லென்ஸ் வயதாகும்போதோ கண்ணில் அடிபடும்போதோ பாதிப்படைந்தால் கண்புரை ஏற்படுகிறது. ஆனால், நாற்பது வயதிற்கு மேல் கண்களில் புரை ஏற்படுவதற்கு முன்பாகவே லென்ஸ் தனது சுருங்கி விரியும் தன்மையை இழப்பதால் அருகில் இருக்கும் எழுத்துகளைப் படிப்பதற்கு சற்று சிரமமாக இருக்கும். இதற்கு வெள்ளெழுத்து என்று பெயர்.

வெள்ளெழுத்து என்பது கிட்டப்பார்வை, தூரப்பார்வை மற்றும் சமச்சீரற்ற பார்வை இவை அனைத்தில் இருந்தும் வேறுபட்டது. மேற்குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் கண்ணின் அமைப்பு மாற்றத்தினால் ஏற்படுவது. ஆனால் வெள்ளெழுத்து என்பது வயதாகும்போது பொதுவாக அனைவருக்கும் ஏற்படும் குறைபாடு ஆகும்.

வயதாகும்போது கண்புரை ஏற்படுவதை எவ்வாறு தடுக்க இயலாதோ அதேபோல் வெள்ளெழுத்து ஏற்படுவதையும் தவிர்க்க இயலாது. கண் தசைகளை உறுதியாக்கும் ஒரு சில கண் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமாக வெள்ளெழுத்து ஏற்படுவதை சில காலம் தாமதப்படுத்தலாமே தவிர முற்றிலும் தடுக்க இயலாது. வயதாகும்போது லென்ஸை சுருங்கி விரிய வைக்கும் சிலியரி தசைகள் வலுவிழந்து விடுகிறது. இவ்வாறு சுருங்கி விரியும் தன்மை பாதிக்கப்படுவதால் வெள்ளெழுத்து குறைபாடு ஏற்படுகிறது. வெள்ளெழுத்து குறைபாட்டால் அருகில் இருக்கும் எழுத்துகளைப் பார்ப்பதற்கு சற்று சிரமமாக இருக்குமே தவிர கண்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

## அறிகுறிகள்:

புத்தகம், பேப்பர் படிக்கும்போது சற்று தூரத்தில் வைத்துப் படித்தால் மட்டுமே எழுத்துகள் தெளிவாகத் தெரியும். அலைபேசியில் இருக்கும் செய்திகளைப் படிப்பதற்கு தொலைபேசி எண்களைப் பார்ப்பதற்கும் சற்று சிரமம் ஏற்படும். குறைவான வெளிச்சம் இருந்தால் அதற்கேற்றவாறு கண்களுக்குள் செல்லும் ஒளியின் அளவு குறைவதால் பார்வை சற்று மங்கலாக இருக்கும். எனவே வெளிச்சம் குறைவான இடங்களில் எழுத்துகளைப் படிக்க இயலாது. எழுத்துக்களைப் படிக்க முயல்வதற்கு கண்களுக்கு அதிக சிரமம் கொடுப்பதால் தலைவலி, தண்ணீர்வடிதல், கண் வலி போன்றவை ஏற்படலாம்.

**சிகிச்சை முறைகள்:**

கண்புரைக்கு அறுவை சிகிச்சை மட்டுமே தீர்வு என்பது போல வெள்ளெழுத்து குறைபாட்டிற்கு கண்ணாடி அணிவதுதான் தீர்வாகும். ஒவ்வொருவரும் அவரவர் செய்யும் பணிக்கேற்ப கண்ணாடி பரிந்துரைக்கப்படும். சிலருக்கு படிப்பதற்கு மட்டுமே கண்ணாடி தேவைப்படலாம். சிலர் தையல், தங்கநகை செய்யும் வேலை போன்ற நுணுக்கமான பணிகளில் ஈடுபட்டிருக்கலாம். தறி நெய்தல், கணினியில் பணிபுரிவோருக்கு அவர்களது பணிக்கு ஏற்ற கண்ணாடி பரிந்துரைக்கப்படும்.

கண் நீர் அழுத்த நோயாளிகளுக்கு கண்ணில் அழுத்தம் அதிகமாக இருப்பதால் சிலியரி தசைகளால் சரிவர சுருங்க இயலாது. அதனால் புத்தகம் படிக்கவும், அருகில் பார்த்து செய்யும் பணிகளையும் செய்ய முடியாது. அடிக்கடி கண்களில் பவர் மாறுவதற்கான வாய்ப்பும் இவர்களுக்கு உள்ளது.

வெள்ளெழுத்து குறைபாடு உள்ளவர்களுக்கு புரோகிரசிவ் மற்றும் பைபோஃகல் என்ற இரண்டு வகை லென்ஸ்கள் பரிந்துரைக்கப்படுகிறது. புரோகிரசிவ் லென்ஸ்கள் தற்போது அதிக மக்களால் விரும்பபடுகிறது. ஏனெனில் இதில் பைபோஃகல் லென்ஸ்களைப் போல லென்சின் கீழ்ப்பகுதியில் எவ்வித பிரிவுகளும் இருக்காது. உங்களுக்கு கிட்டப்பார்வை, தூரப்பார்வை குறைபாடு இருந்தால் அவற்றோடு சேர்த்து வெள்ளெழுத்து குறைபாட்டை சரிசெய்வதற்கும் புரோகிரசிவ் லென்ஸ்கள் பயன்படும். எவ்வளவு தொலைவிலும் உங்களுக்குத் தெளிவான பார்வை கிடைக்கும்.

கண்ணாடி அணிய விருப்பம் இல்லாதவர்கள், மல்டிபோகல் காண்டாக்ட் லென்ஸ்களை பயன்படுத்தலாம் அல்லது கண்புரை ஏற்படும்போது பாதிப்படைந்த லென்ஸை அகற்றிவிட்டு மல்டிபோகல் லென்ஸ் பொருத்துமாறு மருத்துவரிடம் கூறலாம்.

**A.S. *பிரியா, விழி-ஒளி ஆய்வாளர்,***
***அரவிந்த்-கோயம்புத்தூர்***

இதழின் மேலே இடம்பெற்றுள்ள உங்கள் முகவரி உள்ள ஸ்டிக்கரை பார்த்து உங்கள் சந்தா முடிவடையும் மாதத்தைத் தெரிந்து கொள்ளலாம். இந்த மாதத்துடன் சந்தா முடிவடையும் நிலையில் உள்ளவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி வைக்கவும்.

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பிறந்தநாள், திருமணநாள் பரிசாக ‘கண் ஒளி’ இதழை அளிக்கவும். இதழுக்கான சந்தாவை எங்களிடம் செலுத்தவும். உங்கள் சார்பாக ஒவ்வொரு மாதமும் கண் ஒளி இதழை உங்கள் அன்புக்குரியவர்களுக்கு நாங்கள் அனுப்பி வைக்கிறோம்.

கண் நரம்பியல்

# விபத்தினால் ஏற்பட்ட கண் நரம்பு பாதிப்பு



கோயம்புத்தூரில் வசிக்கும் கண்ணன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) காரில் சென்றபோது ஏற்பட்ட விபத்தில் தலையில் பலமாக அடிபட்டுள்ளது. உடனடியாக கண்ணனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்ததில் அவரது உடல்நிலை சிறிது நாட்களில் சரியாகிவிட்டது. பக்கப் பார்வையில் ஆரம்பித்து சிறிது சிறிதாக பார்வை குறைந்து கொண்டே வந்தது. இதனால் தனியாக எங்கும் செல்ல முடியாமல் அடுத்தவரின் துணையை எதிர்பார்த்து இருந்துள்ளார். இதனால் கண்ணன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு பெரும் மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளது. ஆனால் கண் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றாமல் இருந்துள்ளது. அப்போதுதான் அரவிந்த் மருத்துவமனையின் சார்பாக அவரது ஊரில் முகாம் நடைபெற்றது.


நாளடைவில் கண்களில் இருக்கும் பாதிப்பை முழுமையாக பரிசோதித்து அறிய மருத்துவமனைக்கு வருமாறு மருத்துவர் பரிந்துரைத்தார். முதல்கட்ட பரிசோதனைகளுக்குப் பின் கண் நரம்பியல் பிரிவிற்கு கண்ணன் அனுப்பி வைக்கப்பட்டார். காரில் சென்றபோது அடிப்பட்டதைக் கண்ணன் கூறியபோது MRI ஸ்கேன் எடுத்து பரிசோதனை செய்ததில் தலையில் அடிபட்டதன் காரணமாக கண் நரம்பில் பாதிப்பு ஏற்பட்டது கண்டறியப்பட்டது. இதன் காரணமாகத்தான் பக்கவாட்டுப் பார்வை சிறிது சிறிதாக குறைந்துள்ளது என மருத்துவர் தெரிவித்தார். இன்னும் தாமதிக்காமல் உடனடியாக சிகிச்சை செய்தால்தான் பார்வையை காப்பாற்ற முடியும் எனவும் மருத்துவர் அறிவுறித்தினார். மூன்று முறை கண்ணனுக்கு ஸ்டீராய்டு மருந்துகள் நரம்பின் மூலமாகவும், பின் வைட்டமின் மாத்திரைகளும் கொடுக்கப்பட்டது. சிகிச்சைகளின் பலனால் அவரது பார்வையில் 70 சதவீதம் திரும்பக் கிடைத்தது. அதாவது சிகிச்சைக்கு வரும்போது 5/60 என்று இருந்த பார்வைத்திறன் 6/18 ஆக இருந்தது. தற்போதும் மறுபரிசோதனைக்கு தொடர்ந்து வருகிறார்.

விபத்தின்போது கண்களில் அடிபட்டால் மட்டுமே கண் மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டும் என்றில்லை. தலை, நெற்றி போன்று கண்களைச் சுற்றி எந்தப் பகுதியில் அடிபட்டாலும் கண் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

**K.V. *மீனா, விழி-ஒளி ஆய்வாளர், அரவிந்த் - கோயம்புத்தூர்.***

# பிறந்த குழந்தைக்கு ஏற்பட்ட கண்நீர் அழுத்த நோய்





கண் நீர் அழுத்தம் என்பது சத்தமின்றி பார்வையைப் பறிக்கும் என்பதை அறிவோம். பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் பரம்பரை நோய் காரணமாகவும் கண் நீர் அழுத்த நோய் ஏற்படலாம். ஆனால் பிறக்கும் குழந்தைகளுக்கும் கூட இந்நோய் ஏற்படும் அபாயம் உள்ளது.

சமீபத்தில் கவிதா என்பவர் பிறந்து சில மாதங்களே ஆன தன் குழந்தையை கோயம்புத்தூர் அரவிந்திற்கு அழைத்து வந்தார். குழந்தையின் கண்கள் பெரிதாகவும் நீல நிறமாகவும் இருந்தது. முதற்கட்ட பரிசோதனையின் போது குழந்தைக்கு கண் நீர் அழுத்த பாதிப்பு இருப்பதை மருத்துவர்கள் அறிந்தனர். பரம்பரை காரணமாக ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணம் இருக்குமா என்பதை கவிதாவிடம் மருத்துவர்கள் கேட்டறிந்தனர். தங்கள் குடும்பத்தில் இதற்கு முன்பு யாருக்கும் இந்நோய் இருந்ததில்லை என்று கவிதா மருத்துவரிடம் தெரிவித்தார்.

குழந்தை பிறந்த மருத்துவமனையில் இருந்த குழந்தைகள் நல மருத்துவர் குழந்தைக்கு உடடியாக கண் பரிசோதனை மேற்கொள்ளுமாறு அறிவுறித்தியதால் அரவிந்திற்கு வந்ததாகவும் கூறினார். பின் கண் நல மருத்துவர் குழந்தையை கண் நீர் அழுத்த பிரிவிற்கு பரிந்துரை செய்தார். சில கண் பரிசோதனைகளுக்குப் பின் கண் நீர் அழுத்த பாதிப்பு அதிகமாக இருப்பதை உணர்ந்து உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென மருத்துவர் கூறினார்.

எதனால் இந்நோய் குழந்தைக்கு ஏற்பட்டது என்பதை மருத்துவரிடம் கவிதா கேட்டபோது, பிறக்கும்போதே கண் நீர் அழுத்த நோயுடன் குழந்தைகள் பிறப்பதற்கு குறிப்பிடும்படியாக எந்தவொரு காரணமும் இல்லை. தாய் கருவுற்றிருக்கும்போது தொற்றுநோய்க் கிருமிகளால் பாதிக்கப்பட்டிருந்தால் குழந்தைக்கு கண் நீர் அழுத்தம் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது என்றும் தாமதிக்காமல் உடனடியாக சிகிச்சைக்கு அழைத்து வந்ததால் குழந்தையின் பார்வையை காப்பாற்றி விடலாம் எனவும் கவிதாவின் குடும்பத்தினருக்கு நம்பிக்கை தெரிவித்தார் மருத்துவர்.

*A.V. முத்துமாரி, விழி-ஒளி ஆய்வாளர்,*
*அரவிந்த்-கோயம்புத்தூர்.*

கண்தானம்

## கண் ஒளி ஏற்றுவோம்!



என் பாட்டியின் பெயர் பாப்பம்மாள். நாங்கள் இன்று நல்ல நிலையில் இருப்பதற்கு எங்கள் பாட்டி கற்றுக்கொடுத்த விஷயங்கள்தான் காரணம். எங்கள் குடும்பத்தில் ஆளுமையான மனுஷி. எங்களுக்கு மிக முக்கியமான மற்றும் நேசத்திற்குரிய நபர் அவர். சில காலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்து பின் இறந்துவிட்டார். கண்தானம் அளிப்பது அனைத்து விஷயங்களைக் காட்டிலும் சிறந்தது என்று என் மனதிற்கு தோன்றியது. பாட்டி உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோதே கண்தானம் செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். எனவே அவர் இறந்த செய்தியை முக்கியமான குடும்ப நபர்களுக்கு தெரிவிக்கும்போது கண்தான மையத்திற்கும் கூறிவிட்டோம். என் அம்மா இதற்கு முதலில் எதிர்ப்பு தெரிவித்தார். கண்களை எடுத்துவிட்டால் என்ன செய்வது? என்று கூறினார். கண்தானம் செய்வது நல்லதல்ல என்றார். கண்தானம் செய்வது நல்லது என்றும், கண்களை எடுத்த பின்பும் எந்த வித்தியாசமும் தெரியாது, இறந்த பின்பும் பாட்டி இவ்வுலகத்தை காண வேண்டும் என்றால் அது கண்தானத்தின் மூலமாக மட்டுமே முடியும் என்று கூறி அம்மாவிடம் சம்மதம் பெற்றோம். இந்த உலகத்தை கண் இல்லாத ஒருவர் பார்த்து ரசிப்பதற்கு நிச்சயமாக அனைவரும் கண்தானம் செய்ய வேண்டும். ஒவ்வொரு மனிதரும் கண்தானம் செய்ய முன்வாருங்கள்! பார்வையற்றோருக்கு ஒளி கொடுங்கள்!

*– சுதாகர், திண்டுக்கல்*

## கண்தானம் செய்த வள்ளல்கள்

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அரவிந்த் ஒருங்கிணைந்த கண் வங்கி சேவைகள் மூலம் கண்களைத் தானமாக அளித்தவர்களின் எண்ணிக்கை: 300

## கண்தானம் செய்வதற்கு, தொடர்புகொள்ள . . .

**அரவிந்த் கண் வங்கிகள்**

| | |
|---|---|
| மதுரை | – 0452–4356100 |
| திருநெல்வேலி | – 0462–4356100 |
| கோயம்புத்தூர் | – 0422–4360400 |
| பாண்டிச்சேரி | – 0413–2619100 |

**அரவிந்த் கண் சேகரிப்பு மையங்கள்**

| | |
|---|---|
| திண்டுக்கல் | – 0451–2448100 |
| தேனி | – 04546–252658 |
| சேலம் | – 0427–2356100 |

**அரவிந்த் கண்தான மையம்**

கும்பகோணம் – 98428 20007

# அரவிந்த் இலவச கண் பரிசோதனை முகாம்கள் பற்றிய விவரங்கள்

| தேதி | முகாம் நடைபெறும் ஊர், மாவட்டம் (மா) | முகாம் நடைபெறும் இடம் | முகாம் பங்களிப்பாளர் |
|---|---|---|---|
| 16.3.19 | கடவூர்,<br>கரூர்(மா) | இன்பசேவா சங்கம் டிரெயினிங்செல் | இன்பசேவா சங்கம்,<br>9042261153 |
| 16.3.19 | பனைக்குளம்,<br>இராமநாதபுரம் (மா) | கம்யூனிட்டி ஹால் | ஹெல்ப் ஏஜ் இந்தியா,<br>7418829985 |
| 16.3.19 | ஜக்கம்பட்டி,<br>தேனி (மா) | ஆவுடையாச்சி கல்யாண மஹால் | வாசவி கிளப் |
| 16.3.19 | கந்தர்வக்கோட்டை,<br>புதுக்கோட்டை (மா) | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | அன்னை தொஸா டிரஸ்ட் |
| 16.3.19 | மணல்மேடு,<br>நாகை (மா) | விவேகானந்தா மெட்ரிக் பள்ளி | ரோட்டரி சங்கம் |
| 17.3.19 | திருப்பூர் (மா) | லயன்ஸ் ஹால் | லயன்ஸ் சங்கம்,<br>9442190045 |
| 17.3.19 | தென்காசி,<br>திருநெல்வேலி (மா) | சுப்புராஜ் மஹால் | BSSSSO,<br>9842132442 |
| 17.3.19 | காமாட்சிபுரம்,<br>இராம்நாடு (மா) | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | NGO, 9787389149 |
| 17.3.19 | பொன்னமராவதி,<br>புதுக்கோட்டை (மா) | ஆதிகாலத்து அலங்கார மாளிகை | ஆதிகாலத்து அலங்கார மாளிகை |
| 17.3.19 | கொள்ளேகால்,<br>சாம்ராஜ்நகர் (மா) | அரசு தாலூகா தலைமை மருத்துவனை | V&M பவுண்டேஷன் பெங்களூர், 9343968272 |
| 17.3.19 | பட்டம்பி,<br>பாலக்காடு (மா) | வியாபாரி பவன் டிரஸ்ட் | சேம்பர் ஆப் காமர்ஸ்,<br>9846781688 |
| 17.3.19 | ஆத்திகுளம்,<br>மதுரை (மா) | இராமகிருஷ்ண மடம் | இராமகிருஷ்ண மடம்,<br>9487493525 |
| 17.3.19 | நல்லம்பள்ளி,<br>தருமபுரி, (மா) | விஜய் வித்யாலயா ஆர்ட்ஸ் கல்லூரி | விஜய் வித்யாலயா ஆர்ட்ஸ் கல்லூரி, 9698721000 |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர், மாவட்டம் (மா) | முகாம் நடைபெறும் இடம் | முகாம் பங்களிப்பாளர் |
|---|---|---|---|
| 17.3.19 | வடலூர், கடலூர் (மா) | OPR குருகுலம் பள்ளி | சுத்த சன்மார்க்க நிலையம் |
| 17.3.19 | செய்யார், திருவண்ணாமலை (மா) | அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | கௌதம் பைனான்ஸ் |
| 17.3.19 | திருவளர்சோலை, திருச்சி (மா) | ஸ்ரீரங்கம் சீரடி சாய் பவுண்டேஷன் | சீரடி சாய் பவுண்டேஷன், 9500422696 |
| 17.3.19 | ஆத்தூர், சேலம் (மா) | T.V.சங்கம் கல்யாண மஹால் | லயன்ஸ் சங்கம், 9443638081 |
| 17.3.19 | தேனி (மா) | அரவிந்த் கண் மருத்துவமனை | அரவிந்த் கண் மருத்துவமனை |
| 17.3.19 | பண்ருட்டி, கடலூர் (மா) | திருவள்ளுவர் பள்ளி | ஆரிய வைசிய சமூகம் |
| 17.3.19 | சீதாபட்டினம், விழுப்புரம் (மா) | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | லயன்ஸ் சங்கம் |
| 17.3.19 | விழுப்புரம் (மா) | ABD ஹால் | லயன்ஸ் சங்கம் |
| 17.3.19 | வாய்மேடு, நாகை (மா) | விக்டரி மெட்ரிக் பள்ளி | ரோட்டரி சங்கம் மருதூர் |
| 21.3.19 | வடபுதுப்பட்டி, தேனி (மா) | நாயுடு சங்கக் கட்டிடம் | A.T.K.மில் |
| 23.3.19 | பெருங்குளம், இராமநாதபுரம் (மா) | கம்யூனிட்டி ஹால் | ஹெல்ப் ஏஜ் இந்தியா,9943194464 |
| 23.3.19 | பாளையம், தேனி (மா) | ஊராட்சி ஒன்றிய பள்ளி | வ.உ.சி.கிளப் |
| 24.3.19 | சுப்ரமணியபுரம், புதுக்கோட்டை (மா) | அரசு மே.நி.பள்ளி | ஓம் சக்தி மன்றம், 9443362716 |
| 24.3.19 | திருவெரம்பூர், திருச்சி (மா) | ஜெய்நகர் சாயிபாபா கோயில் | சாயிபாபா கோயில், 9865612614 |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர், மாவட்டம் (மா) | முகாம் நடைபெறும் இடம் | முகாம் பங்களிப்பாளர் |
|---|---|---|---|
| 24.3.19 | இராசிபுரம், நாமக்கல் (மா) | சுமங்கலி கல்யாண மஹால் | லயன்ஸ் சங்கம், **9443340939** |
| 24.3.19 | குகை சேலம், சேலம் (மா) | தேவாங்கர் மகாஜன கல்யாண மஹால் | ரோட்டரி சங்கம், **9344806214** |
| 28.3.19 | தேவராயன்பாளையம், திருப்பூர் (மா) | AKVN மருத்துவமனை | சென்னை சில்க்ஸ், **8508328773** |
| 28.3.19 | உச்சிப்புளி, இராமநாதபுரம் (மா) | கம்யூனிட்டி ஹால் | ஹெல்ப் ஏஜ் இந்தியா, **9943194464** |
| 30.3.19 | ஹன்சூர், மைசூர் (மா) | SLV கம்யூனிட்டி ஹால் | திரு.சின்னசாமி மற்றும் முருகேசன் குடும்பம், **9448352929** |
| 30.3.19 | T. கல்லுப்பட்டி, மதுரை (மா) | அய்யனார் கல்யாண மஹால் | நகர்நல கமிட்டி, **9842175940** |
| 30.3.19 | ஆராவயல், சிவகங்கை (மா) | சாத்தப்ப செட்டியார் பள்ளி | N.S.N.A |
| 30.3.19 | வளநாடு, திருச்சி (மா) | இராமரத்தின கல்யாணமஹால் | Dr.VNL டிரஸ்ட், **9965560142** |
| 30.3.19 | மஞ்சநாயக்கன்பட்டி, தேனி (மா) | ஊராட்சி ஒன்றிய பள்ளி | வாசவி கிளப் |
| 31.3.19 | ஊட்டி, நீலகிரி (மா) | CSI ஹோபர்ட் பள்ளி | ரோட்டரி சங்கம், **9442109100** |
| 31.3.19 | விராலிமலை, புதுக்கோட்டை (மா) | அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | அன்னை தெரஸா டிரஸ்ட் |
| 31.3.19 | விருப்பாச்சி, திண்டுக்கல் (மா) | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி | ஹோட்டல் அன்னபூர்ணா, **9578016555** |
| 31.3.19 | கும்பகோணம், தஞ்சாவூர் (மா) | சரஸ்வதி பாடசாலை | கும்பகோணம் ஹோஸ்ட், **9443116356** |
| 31.3.19 | தொடுபுழா, இடுக்கி (மா) | ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் | பிரியதர்ஷினி |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர், மாவட்டம் (மா) | முகாம் நடைபெறும் இடம் | முகாம் பங்களிப்பாளர் |
|---|---|---|---|
| 3.4.19 | கன்னியாகுமரி, (மா) | விவேகானந்த கேந்திரா ஹால் | விவேகானந்த கேந்திரா, 9486030438 |
| 6.4.19 | சிந்தாமணி, திருநெல்வேலி (மா) | R.C. பிரைமரி பள்ளி | ராஜகோபால் நாயக்கர் டிரஸ்ட், 9865493488 |
| 6.4.19 | தருமபுரி (மா) | ரோட்டரி ஹால் | ரோட்டரி சங்கம், 9842761659 |
| 6.4.19 | சாம்ராஜ் நகர் (மா) | அரசினர் மருத்துவமனை | DBCS சாம்ராஜ் நகர், 9945228015 |
| 7.4.19 | வடசேரி, கன்னியாகுமரி (மா) | SMRV மே.நி.பள்ளி | BSSSSO, 9578678075 |
| 7.4.19 | கொப்பம், பாலக்காடு (மா) | லயன்ஸ் பள்ளி பாலக்காடு | லயன்ஸ் சங்கம், 9349458196 |
| 7.4.19 | திருப்பரங்குன்றம், மதுரை (மா) | மாதா அமிர்தானந்தமயி மடம் | மாதா அமிர்தானந்தமயி மடம், 9443337080 |
| 7.4.19 | மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் (மா) | ஜெயின் சங்கம் பில்டிங் | ஜெயின் சங்கம், 9865789137 |
| 7.4.19 | கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு (மா) | சின்ன வைரவிழா எலிமெண்டரி பள்ளி | லயன்ஸ் சங்கம், 9791966759 |
| 11.4.19 | தேவராயன்பாளையம், திருப்பூர் (மா) | AKVN மருத்துவமனை | சென்னை சில்க்ஸ், 8508328773 |
| 13.4.19 | தருமபுரி, (மா) | சந்திரபாலசுப்பிரமணியம் மெ.பள்ளி | ஹேமலதாடிரஸ்ட், 9942253585 |
| 13.4.19 | சத்தியமங்கலம், ஈரோடு (மா) | ரோட்டரி ஹால் | ரோட்டரி சங்கம் சத்தி, 9943011211 |
| 13.4.19 | உடுமலைப்பேட்டை, திருப்பூர் (மா) | லயன்ஸ் ஹால் | லயன்ஸ் சங்கம், 9894623625 |
| 13.4.19 | நஞ்சன்கூடு, மைசூர் (மா) | டவுன் டென்னிஸ் கிளப் | டவுன் டென்னிஸ் கிளப், 9019126767 |
| 14.4.19 | R.R. நகர், விருதுநகர் (மா) | ஸ்ரீராம் பிரைமரி பள்ளி | ராம்கோ சிமெண்ட், 9994497864 |
| 14.4.19 | ஈரோடு (மா) | செங்குந்தர் ஆண்கள் மே.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம், 9442789599 |
| 14.4.19 | ஆவுடையார்கோவில், புதுக்கோட்டை (மா) | செயின்ட் ஜோசப் ந.நி.பள்ளி | வின்சென்ட் டீ–பால் சொசைட்டி, 9047398562 |

# ARAVIND OPTICALS

புரொக்ரஸிவ்
லென்ஸ்கள்

பிரதிபலிப்பு இல்லாத
கண்ணாடிகள்

கீறல் விழாத
கண்ணாடிகள்

ஏராளமான
அழகிய ஃபிரேம்கள்




தரமான கண் கண்ணாடிகள் வாங்க
எங்களை அணுகுங்கள்

## அரவிந்த் ஆப்டிகல்ஸ்


அரவிந்த் கண் மருத்துவமனைகள்

மதுரை | திருநெல்வேலி | கோயம்புத்தூர் | பாண்டிச்சேரி | சேலம் | சென்னை
தேனி | திருப்பூர் | திண்டுக்கல் | தூத்துக்குடி | உடுமலைப்பேட்டை | கோயம்புத்தூர் சிட்டி சென்டர்

# கண்ணீர் அழுத்த நோய்




- கண்ணின் முன்பகுதியின் ஓரத்தில் அமைந்துள்ள சிலியரி (ciliary body) என்ற இடத்தில் திரவம் சுரக்கப்படுகிறது.
- இத்திரவம் கருவிழியின் ஓரத்தில் உள்ள சல்லடை போன்ற பகுதி வழியாக வெளியேறி இரத்தத்தில் கலந்து விடுகிறது.
- அவ்வழியில் அடைப்பு ஏற்பட்டாலோ அல்லது அதிக திரவம் சுரந்தாலோ கண்நீர் அழுத்த நோய் ஏற்படுகிறது.



- நாம் காணும் பிம்பங்களை மூளைக்கு எடுத்துச் செல்லும் பார்வை நரம்புகள் இந்நோயினால் விரைவில் பாதிக்கப்படுகின்றன.
- இதனால் குணப்படுத்த முடியாத நிரந்தரமான பார்வையிழப்பு ஏற்படுகிறது.


கண்நீர் அழுத்த நோய்க்கு ஆரம்ப அறிகுறிகள் கிடையாது



சரியான சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் இந்நோய் தீவிரமடைந்து . . .



. . . நிரந்தர பார்வையிழப்பிற்கு வழிவகுக்கும்



**Registered Number : TN/MA/ 14/2018-2020, RNI No : TNTAM /2000/912**
**Date of publishing : 5th February 2019, Date of posting : 10, 11th February 2019 Posted at BPC, Madurai**

*Owned and published by Dr. G. Natchiar from Aravind Eye Hospital, 1, Anna Nagar, Madurai - 625 020 and Printed by N. Seshadri at Graphico, No, 172, Vakil New Street, Simmakkal, Madurai - 625 001.*
*Editor: Dr. G. Natchiar / Annual Subscription Rs.25/-*